# பெரியகுளம் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2023–2024

**துவக்கம் :–**

இந்நகர மக்களின் நல்வாழ்வு வசதிகளை நகர மக்களால் நியமிக்கப்பட்ட சுகாதார சங்கம் 31.03.1886 வரை கவனித்து வந்தது. மக்களின் வேண்டுகோளின்படி, 01.04.1886–லிருந்து ''பெரியகுளம் நகராட்சி'' மூன்றாம் நிலை நகராட்சியாக இயங்க அரசினரால் ஆணையிடப்பட்டது. அரசினரின் 09.09.1966–ம் தேதிய 2145 (கிராம நலம் உள்ளாட்சித் துறை) எண் ஆணைப்படி 22.9.1966 முதல் இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகிறது.

**பகுதிகள் :–**

அறிக்கையாண்டில் நகராட்சியின் எல்லைகளிலும், வார்டுகளில் மாற்றம் எதுவும் இல்லை. நகரம் 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வார்டு பிரிவினை செய்ய அறிவுரை வழங்கி வரலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 11.6.1996ம் நாளிட்ட அரசாணை எண்.135–ன்படி இந்நகராட்சி பகுதி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசு அரசிதழ் வெளியீடு அரசாணை எண்.407 நாள் 14.12.2018 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்தரவின்படி வார்டுகள் 30 உள்ளதில் வார்டுகளின் எல்லைகள் மற்றும் தெருக்கள் மாற்றி பராமரிக்கப்பட்டு வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 20.05.2019 தேதிய அரசிதழ் எண்.219, பகுதி II பிரிவு 2ன்படியான தேர்தல் அறிவிக்கையின்படி வார்டுகள் 13, 15, ஆதிதிராவிடர் (பொது ), வார்டுகள், 11, 14, 30 ஆதிதிராவிடர் (பெண்கள்), வார்டுகள் 1, 6, 8, 9, 10, 12,16, 18, 19, 21, 25, 29 (பெண்கள் பொது) வார்டுகளாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 13 வார்டுகள் பொது பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டது.

**மன்றம் :–**

19.02.2022 அன்று நகர்மன்ற உறுப்பினர் தேர்தல் நடைப்பெற்றது. 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடைப்பெற்று வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. 04.03.2022ஆம் நாள் நடைபெற்ற உறுப்பினர்களிடையே நடைப்பெற்ற மறைமுக தேர்தலில் 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ச.சுமிதா அவர்கள் நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

04.03.2022ஆம் நாள் உறுப்பினர்களிடையே நடைப்பெற்ற மறைமுக தேர்தலில் 26 வார்டு நகர்மன்ற உறுப்பினர் நகர்மன்ற துணை தலைவராக திரு.சே.ராஜாமுகமது போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்த குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் கூட்டம் 31.03.2022 அன்று முற்பகல் 9.30 மணியளவில் பெரியகுளம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திருமதி.கு.ராஜேஸ்வரி**, 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திருமதி.எஸ்.ஆபிதாபேகம்,** 25 வது நகர்மன்ற உறுப்பினர் **திருமதி.எம்.நாகபாண்டி** மற்றும் 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திரு.ஆர்.குமரன்** ஆகியோர் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யாத காரணத்தினால் மேற்படி நான்கு பேரும் வரிவிதிப்பு மேல்முறையீட்டுகுழு உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நியமனக்குழு உறுப்பினர் தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தலில் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திருமதி.கே.கிஷோர்பானு** என்பவர் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்தார். வேறுயாரும் வேட்புமனு தாக்கல் செய்யாத காரணத்தினால் **திருமதி.கே.கிஹோர்பானு** என்பவர் நியமனக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் குழு உறுப்பினர் தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தலில் 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திரு.பி.சரவணராஜா** என்பவர் மட்டும் வேட்புமனு தாக்கல் செய்தார். வேறுயாரும் வேட்புமனு தாக்கல் செய்யாத காரணத்தினால் **திரு.பி.சரவணராஜா** என்பவர் மட்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

| வ. எண் | வார்டு எண். | பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | 4 | திருமதி.ச.சுமிதா | நகர்மன்றத்தலைவர் |
| 2 | 26 | திரு.சே.ராஜாமுகமது | நகர்மன்ற துணைத்தலைவர் |
| 3 | 1 | திருமதி. டா.ரூபினி | நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | 2 | திரு. ரா.பால்பாண்டி | நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | 3 | திரு. போ.சரவண ராஜா | நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | 5 | திரு. ஷே.அப்துல் மஜித் | நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | 6 | திருமதி. இ.லட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | 7 | திரு.மு.முகமது அலி | நகர்மன்ற உறுப்பினர் |
| 9 | 8 | திருமதி. கு.ராஜேஸ்வரி | நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | 9 | திருமதி. த.சத்தியா | நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | 10 | திருமதி. ச.ஆபிதாபேகம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | 11 | திருமதி. மு.பவானி | நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | 12 | திருமதி. அ.சாஹிராபானு | நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | 13 | திரு. மு.மதன்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | 14 | திருமதி. நா. சுதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | 15 | திரு. செ.பிரேம்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | 16 | திருமதி. கா.கிஸோர்பானு | நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | 17 | காலியிடம் | |
| 19 | 18 | திருமதி. ர.சந்திரா | நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | 19 | திருமதி. ரா.பிரியங்கா | நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | 20 | திரு.ம.வெங்கடேசன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 22 | 21 | திருமதி. சு.சந்தானலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 23 | 22 | திருமதி.இ. ராணி | நகர்மன்ற உறுப்பினர் |
| 24 | 23 | திரு.ரா.குமரன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 25 | 24 | திரு.ஒ.சண்முக சுந்தரம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 26 | 25 | திருமதி.நாகபாண்டி | நகர்மன்ற உறுப்பினர் |
| 27 | 27 | திரு. சு.குருசாமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 28 | 28 | திரு.பொ. பாண்டியராஜன் | நகர்மன்ற உறுப்பினர் |
| 29 | 29 | திருமதி. முத்துலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் |
| 30 | 30 | திருமதி. கிருஷ்ணவேணி | நகர்மன்ற உறுப்பினர் |

**மக்கள் சாசனம் :–**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணைநிலை எண்.58, 10.04.98இன்படி மக்கள் சாசனம் அரசு நலத்திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் சேவைமையம் அமைத்தல் மக்கள் சாசனம் வெளியிடுதல் சம்பந்தமாக அறிவுரை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிகளில் பெரும்பாலும் பொதுமக்கள் கீழ்க்கண்ட தேவைகளுக்காகவும் அவற்றின் சேவைகளைப் பெற வேண்டிவரும்.

| | | | |
|---|---|---|---|
| அ) | குடிநீர் இணைப்புகள் பெற | – | 7 நாட்கள்(விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து) |
| ஆ) | பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் பெற | – | 7 நாட்கள் |
| இ) | கட்டிட வரைபடங்களுக்கான அனுமதி பெற | – | 30 நாட்கள் |
| ஈ) | சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய | – | 15 நாட்கள் |
| உ) | வணிக உரிமங்கள் பெற | – | 45 நாட்கள் |

ஊ) அடிப்படை வசதிகளான – சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர், கழிவுநீர் போன்றவை பற்றிய புகார்கள் களைய நிர்வாகம் எடுத்துக்கொள்ளும் அதிகபட்ச காலம் ஆகியவை பற்றிய பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் மேற்கண்ட அரசு ஆணை வெளியிடப்பட்டது.

மேற்படி சேவைமையம் மூலம் பெறப்படும் பிறப்பு மற்றும் ,இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி உரிய காலத்திற்குள் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**ஆணையாளர், பொறியாளர் மற்றும் மேலாளர் விவரம்:-**

| பதவி விபரம் | பெயர் திருவாளர்கள் | காலம் |
|---|---|---|
| ஆணையாளர் | 1)கி.புனிதன் | 01.04.2023 முதல் 05.04.2023 வரை |
| | 2)வீரமுத்துக்குமார் | 06.04.2023 முதல் 27.04.2023 வரை |
| | 3)கி.புனிதன் | 28.04.2023 முதல் 02.06.2023 வரை |
| | 4) சூ.கணேசன் | 02.06.2023 முதல் 03.11.2023 வரை |
| | 5) ம.மீனா | 04.11.2023 முதல் 31.03.2024 வரை |
| நகராட்சி பொறியாளர் | 1)சத்தியமூர்த்தி | 01.04.2023 முதல் 07.11.2023 வரை |
| | 2) வீ.ராஜேஷ் | 08.11.2023 முதல் 31.03.2024 வரை |
| மேலாளர் | பா.கோவிந்தராஜ் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |
| கணக்கர் | மு.சிவமூர்த்தி | 01.04.2023 முதல் 13.02.2024 வரை |
| | வி.விஷ்ணு (கூ.பொ) | 14.02.2024 முதல் 12.03.2024 வரை |
| | மு.முகுந்தன் | 13.03.2024 முதல் 31.03.2024 வரை |

**பொது நிர்வாகம் :–**

அலுவலக பணியாளர்கள் மற்றும் ஒய்வூதியர்கள் அறிக்கை ஆண்டில் ஊதியத்திற்கென ரூ.676.06 லட்சம்/– செலவிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப–1) துறை நாள் 23.01.2023ன்படி பணியாளர்கள் விவரம்

| பொது பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| நகராட்சி பொறியாளர்<br>நிலை III உதவிபொறியாளர் | 1 |
| மேலாளர் | 1 |
| துப்புரவு ஆய்வர் | 1 |
| வருவாய் ஆய்வாளர் | 1 |
| நகரமைப்பு ஆய்வாளர் | 1 |
| பணிமேற்பார்வையாளர் | 1 |
| கணக்கர் | 1 |
| உதவியாளர் | 1 |
| இளநிலைஉதவியாளர் | 5 |
| தட்டச்சர் | 1 |
| வருவாய் உதவியாளர் | 3 |
| குழாய் பொருத்துநர் | 1 |
| துப்புரவு பணிமேற்பார்வையாளர் | 4 |
| களப்பணி உதவியாளர் | 1 |
| பதிவறை எழுத்தர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 3 |
| படவரைவாளர் நிலை III | 1 (காலியிடம்) |
| பணி ஆய்வர் | 2 (காலியிடம்) |
| மின்பணியாளர் நிலை II | 1 (காலியிடம்) |
| மொத்தம் | 31 |

**சாலைகள் :–**

இம்மன்றத்தினரால் பராமரிக்கப்பட்டு சென்ற ஆண்டு இறுதியில் இருந்த சாலைகளின் விபரம் வருமாறு :

1. சிமிண்ட் தளம் – 3.366 கி.மீ.
2. தார் தளம் – 20.365 கி.மீ.
3. பேவர் ப்ளாக் – 20.061 கி.மீ
4. மண்சாலை – 4.477 கி.மீ.

**மொத்தம் – 48.249கி.மீ.**

**பாலங்கள் :–**

இந்நகராட்சி எல்கைக்குள் தற்போது மூன்று பாலங்கள் உள்ளன. மேற்படி பாலங்களில் ஒன்று நெடுஞ்சாலை இலாகா பொறுப்பிலும், மற்ற இரண்டு பாலங்களும் பொதுப்பணி துறை பராமரிப்பிலும் உள்ளன.

**பாலங்கள் விபரம்**

1) கம்பம் சாலை பாலம் (நெடுஞ்சாலை)
2) ஆடுபாலம் (பொதுப்பணித்துறை)
3) புதுப்பாலம் (பொதுப்பணித்துறை)

**கருவிகளும் தளவாடங்களும் :–**

தீ அணைப்பு கருவிகள் – 4 எண்ணம்

**இதர கருவிகள் :—**

| | | |
|---|---|---|
| டிராக்டர் டிரைலருடன் | — | — |
| தள்ளு வண்டிகள் | — | 10 |
| மின்கல வாகனங்கள் (BOV) | — | 19 |
| இலகுரக வாகனங்கள் (LCV) | — | 9 |
| காற்றடிக்கும் கருவி | — | — |
| ஜீப் | — | 3 |
| குடிநீர் டேங்கர் மினி லாரி | — | 1 |
| பிரண்ட் எண்ட் லோடர் | — | 1 |
| ஜெட்ராடிங் இயந்திர வாகனம் | — | 1 |
| மினி டிப்பர் லாரி | — | 2 |

**விளக்குகள் :—**

நகராட்சியில் தெருவிளக்குகள் அனைத்தும் பராமரிப்பு பணி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு, நிறுவனம் மூலம் Sadaiyandi Agencies Andipatti (Tk) நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகரில் கீழ்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. LED 20 வாட்ஸ் | — | 1232 |
| 2. LED 40 வாட்ஸ் | — | 195 |
| 3. LED 70 வாட்ஸ் | — | 180 |
| 4. LED 200 வாட்ஸ் | - | 52 |
| 5. 100 வாட்ஸ் LED mini mass | - | 12 |
| 6. சோலார் mini mass92 வாட்ஸ் | — | 3 |

அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்கென லட்சம் செலவிடப்பட்டு உள்ளது.

**கல்வி :—**

இந்நகராட்சியால் நடுநிலை ஆரம்ப பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வந்தது. அரசினரின் 09.03.90ம் தேதிய 347—ம் எண் அரசாணையின்படி 01.04.90 முதல் கல்வித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி துறையின் பராமரிப்பில் உள்ளது. தற்போது 3 நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு மட்டும் இந்நகராட்சியின் வசம் உள்ளது.

**உயர்நிலைக் கல்வி :—**

இந்நகராட்சியால் உயர்நிலைப்பள்ளிகளோ மேல்நிலை பள்ளிகளோ பராமரிக்கப்படவில்லை.

**நூல் நிலையங்கள் படிப்பகங்கள் :—**

வடகரையில் ஒன்றும், தென்கரையில் ஒன்றுமாக இரண்டு நூலகங்கள் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி இரண்டு அலுவலகங்களும் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் ஆளுகைக்குட்பட்டது ஆகும்.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் :—**

நகராட்சி பள்ளிகள் மூன்றிலும் பள்ளி மதிய உணவு திட்டம் செயல்பட்டு வருகிறது. 5 முதல் 9 மற்றும் 10 முதல் 14 வயதிலுள்ள குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். நகராட்சிப் பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளி சத்துணவு மையங்கள் 27. 17.10.98 முதல் இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மொத்தமாக 6053 பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு தினசரி 100 கிராம் அரிசி, 150 கிராம் பருப்பு, 0.019 கி.கி. உப்பும் மற்றும் 3 கிராம் எண்ணெய் செலவிடப்பட்டு வருகிறது. 20 கிராம் காய்கறி 20 கிராம் மளிகை சாமான்கள் மற்றும் எரிபொருட்கள் செலவிற்காக நபர் ஒன்றுக்கு 0.35 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

**<u>தணிக்கை</u> :–**

2022 – 2023ஆம் ஆண்டு தணிக்கை முடிவுற்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. 2023 – 2024 ஆண்டு தணிக்கை ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. அறிக்கை ஆண்டின் இறுதியில் உள்ளாட்சி நிதி தணிக்கை தடைகள் 146 பத்திகளும் AG தணிக்கை தடைகள் 8 பத்திகளும் நிலுவையில் உள்ளன.

**<u>மருத்துவமனை</u> :–**

இந்நகர் மன்றத்தினரால் முதல் முதலில் ஒரு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. நகராட்சியிடம் போதிய நிதி வசதியின்மையால் 1913–15–ம் ஆண்டில் ரூ.58,000/– அரசு மான்யம் ஆகப் பெற்றும் ரூ.5,405/– நகர்மன்ற நிதியிலிருந்தும் செலவு செய்தும் புதிய மருத்துவமனை கட்டிடம் எழுப்பப்பட்டது.

இப்புதிய மருத்துவமனை 22.12.1921–ல் துவக்கப்பட்டு வேல்ஸ் இளவரசரின் சென்னை வருகையின் நினைவாக 1922–ம் ஆண்டு இம்மருத்துவமனைக்கு பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என பெயரிட்டு ஒரு சிவில் அசிஸ்டண்ட் சர்ஜன் மேற்பார்வையில் நகராட்சி நிறுவனமாக இயங்கி வந்தது. பின்னர், அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது.

இப்புதிய மருத்துவமனை நகரின் மேற்பகுதியில் உள்ளதால், இந்நகரின் கீழ்பகுதி வாழ் ஏழை மக்களின் மருத்துவ வசதியை கருத்தில் கொண்டு, நகர் மன்றத்தினரால் 1952–ம் ஆண்டில் ஒரு சித்தா மருத்துவமனை சொந்த கட்டிடத்தில் திறக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வந்தது. நகராட்சி சித்தா மருத்துவமனை அதிகாரி (டாக்டர்) பணியிடம் மற்றும் மருந்து கட்டுபவர்கள் பணியிடம் அறிக்கையாண்டில் காலியாக உள்ளது. மருந்து கலப்பவர் மாறுதல் ஆகி சென்றதை தொடர்ந்து இப்பணியிடம் 24.2.97 முதல் காலியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| சித்த மருத்துவ அதிகாரி | 1 | (காலியிடம்) |
| மருந்து கலப்பவர் | 1 | (காலியிடம்) |
| மருந்து கட்டுபவர்கள் | 2 | (காலியிடம்) |

அறிக்கையாண்டில் சித்தா மருத்துவமனை இயங்கவில்லை.

**<u>மகப்பேறு மருத்துவமனைகள்</u> :–**

அரசு மருத்துவமனையில் மகப்பேறு கவனிக்கப்பட்டு வருகிறது. நகரின் கீழ்பகுதியில் ஏழை மக்கள் அதிகம் வாழ்வதால் அவ்வமயம் நகர்மன்றத் தலைவராக இருந்த உயர்திரு.கே.எம்.எம்.மேத்தா அவர்களது பெருமுயற்சியின் காரணமாக காலஞ்சென்ற திரு.ஜெயராஜ் அவர்களது நினைவாக அன்னாருடைய குடும்பத்தினர் ரூ.1,00,000/– செலவில் நகராட்சிக்கு நன்கொடையாக கட்டிக்கொடுத்த ஜெயராஜ் அன்னபாக்கியம் நினைவு மகப்பேறு (நகராட்சி) இல்லம் 15.04.1974–ம் தேதியிலிருந்து துவங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

மகப்பேறு இல்லத்தில் கீழ்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| | |
|---|---|
| பெண் மருத்துவ அதிகாரி | 1 |
| மகப்பேறு உதவியாளர் | 1 (காலியிடம்) |
| மகப்பேறு ஆயா | 3 (3 காலியிடம்) |

இந்த அறிக்கையாண்டில் இம்மருத்துவமனையில் 3 பிறப்புகள் கவனிக்கப்பட்டது.

2000 மே 8 ஆம் தேதி முதல் RCHP செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்

1. செவிலியர் – 3 (2 காலியிடம்)
2. கம்ப்யூட்டர்–கம்–கிளர்க் – 1 (காலியிடம்)
3. பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் – 4 (2 காலியிடம்)

பணிபுரிந்து வருகிறர்கள்.

**<u>தேசிய நகர் நல மையம் (NRHM) திட்டத்தின் கீழ்</u>**

1. லேப் டெக்னீசியன் – 1
2. மருந்தாளுநர் – 1
3. மருத்துவமனை பணியாளர் – காலியிடம் (1)
4. NCD – காலியிடம் (2)

April 2022 to march 2023

| | | |
|---|---|---|
| Screening Hypertension | - | 9639 |
| SDM | - | 3825 |
| Screening CACX | - | 287 |
| Screening CABR | - | 322 |
| New Hypertension | - | 61 |
| Known c/o Hypertension | - | 15 |
| New Dm | - | 95 |
| Known Dm | - | 11 |

| | | |
|---|---|---|
| Total Patients | - | 2038 |
| CACX Positive | - | 16 |
| CABR Positive | - | 15 |

Total Follow up line list Cases

| | | |
|---|---|---|
| HT | - | 5083 |
| DM | - | 4272 |
| Both | - | 3006 |
| Total | - | |

தினந்தோறும் மேற்கண்ட மகப்பேறில்லத்தில் புற நோயாளிகள் பிரிவு இயங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | = | கர்ப்பிணி தாய்மார்கள் பரிசோதனை நாள் |
| திங்கள், புதன், சனி | = | அனைத்து நோயாளிகளும் பார்க்கும் நாள் |
| புதன் | = | தடுப்பூசி நாள் |
| மாலை | = | குழந்தையில்லாதவர்கள் & இனப்பெருக்க நோய்களுக்கான பரிசோதனை நடைபெற்று வருகிறது. |

**வெளி நோயாளிகள் :–**

47,369 மருத்துவ கவனிப்பு பெற்றனர்.

4872 பேறுகால முன்கவனிப்பு கவனிக்கப்பட்டனர்.

287 பால்வினை நோயாளிகள் கவனிக்கப்பட்டனர்.

574 சிறார்கள் (1 வயது) கவனிக்கப்பட்டனர்.

ஏப்ரல் 2024 முதல் ஜுலை 2024

L.T.

**April 2024 to July 2024**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MAPiril | - 483 | | | | | |
| RBS | - | 385 | u/s | - | 587 | upt - 106 |
| Sr.chol | – | 137 | u/A | - | 587 | |
| Sr. crea | - | 220 | Hb | - | 631 | |

**ANC – OP**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| GCT | - | 187 | RBS | - 72 | u/s | - | 187 |
| U/s | - | 187 | Hb | - 190 | Sr. crea | - | 30 |

**நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் :–**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| T.T.(E.M) | – | 480 | | | | | |
| BCG | | M-226 | F | - | 221 | - = | 447 |
| DPT Br | – | M-350 | F | - | 224 | - = | 574 |
| POLIO | – | M-228 | F | - | 232 | - | 460 |
| MEASLES | – | M-255 | F | - | 233 | - = | 488 |
| Inj. Pentavalant | – | M-228 | F | - | 232 | - | 460 |
| Measles Rubells II | – | M-350 | F | - | 224 | - = | 574 |

**பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டம் :–**

கீழ்கண்டவாறு நோய் தடுப்பு ஊசிகளும் போடப்பட்டுள்ளது.

| | | ஆண் | | பெண் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 5% DPT | – | 312 | + | 271 | = | 583 |
| டி.டி. | | – | | – | = | –– |
| டி.டி. | 10 வயது | 357 | + | 328 | = | 685 |
| டி.டி. | 16 வயது | 245 | + | 504 | = | 749 |

**பிறப்பு விகிதமும், பிரசவ உதவியும் :–**

வடகரை, தென்கரை ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் 2 துப்புரவு ஆய்வரால் பிறப்பு, இறப்பிற்கான பதிவுகளை பதிவு செய்கிறார். நடப்பாண்டில் (2023) பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 30 இறப்புகளின் எண்ணிக்கை 215 ஆகும். 2018ம் ஆண்டு முதல் பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பிறக்கும் பிறப்புகள் மற்றும் இறப்புகள் அங்கேயே பதிவு செய்து சான்று வழங்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இறப்பு விகிதமும், தொற்று கொள்ளை நோய்களும் :–**

2023–2024ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புக்கள் 215 அவற்றிற்கான காரணங்களும் இறப்பு விகிதங்களும் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| வாந்தி பேதி | – | – |
| காய்ச்சல் | – | – |
| தொற்றுநோய் | – | – |
| இதர காய்ச்சல் (டெங்கு) | – | – |
| சீதபேதி | – | – |
| வயிற்றுபோக்கு (ஏ.டி.டி) | – | – |
| டைபாய்டு | – | – |
| சுவாச சம்பந்தமான இதர நோய் | – | – |
| பிரசவத்தின்போது இறந்த தாய்மார்கள் | – | – |
| இதர காரணங்கள் | – | – |
| இதய நோய்கள் | – | – |
| நீரழிவு நோய் | – | – |
| கொரோனா | – | – |
| சுவாசம் சம்மந்தமான நோய் | – | – |
| | | 215 |

**கொரோனா (Covid-19) தொற்று பணிகள் :–**

2023ம் ஆண்டில் மூன்று நபர்களுக்கு மட்டும் பாதிப்பு பதிவாகி மருத்துவ கிசிச்சை பெற்று நல்ல முறையில் உள்ளனர். இந்நகராட்சி மூலமாக தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் இந்நகர் பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி முகாம்கள் அமைத்து 99% க்கும் மேலான மக்கள் பயனடைந்துள்ளனர். தற்போது இந்நகர் பகுதியில் கொரோனா நோய் தொற்று ஏதும் இல்லை. 2024ஆம் ஆண்டு கொரோனா நோய் தொற்று ஏதும் இல்லை.

**டெங்கு தடுப்பு பணிகள் :–**

2023ம் ஆண்டிற்கு 40 நபர்கள் மட்டுமே டெங்கு காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமாகியுள்ளனர். நோய் தொற்று கண்டறியப்பட்டவுடன் நகராட்சி பணியாளர்கள் மூலமாக கொசுப்புழு ஒழிப்பு களப்பணி செய்தல் புகை மருந்து அடித்தல், நிலவேம்பு கசாயம் வழங்குதல், சாக்கடை கிருமி நாசினி மருந்துகள் அடித்தல் போன்ற பல்வேறு பணிகள் மூலமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் நகரின் வார்டு பகுதியில் சாதாரண காய்ச்சல் கண்டறியப்பட்டாலும் முன்னேச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை பணிகள் உடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது தற்சமயம் டெங்கு பாதிப்பு இந்நகர் பகுதியில் இல்லை.

**சுகாதார பராமரிப்பு :–**

| | முதல் பகுதி | 2ம் பகுதி | மொத்தம் |
|---|---|---|---|
| தூய்மை பணியாளர்கள் | 5 | 4 | 9 |
| குப்பை தொட்டிகள் (Dumper Placer Bins) | 0 | 0 | 0 |

பெரியகுளம் நகராட்சி குப்பை தொட்டி இல்லாத நகரமாக அங்கீரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்திலும், மார்கெட் பகுதியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரண்டு நவீன கட்டண கழிப்பறைகள் உள்ளன. நகராட்சியில் தூய்மை பணியாளர்கள் பணிபுரிவதால் அவர்கள் குடியிருப்பதற்கு வடகரையில் 24 வீடுகளும் தென்கரையில் 20 வீடுகளும் மொத்தம் 44 வீடுகளும் மின் இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளன. புதிதாக 18 அடுக்குமாடி குடியிருப்புகள் பயன்பாட்டில் உள்ளது. இரண்டு சுடுகாடுகளும் நகர்மன்றத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. வடகரை சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திலிருந்து தடையின்மை சான்று பெற்று செயல்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகளில் 111 பயனாளிகளுக்கு SBM திட்டத்தில் தனிநபர் கழிப்பறை ( IHHL) கட்டி கொடுத்து சுகாதார மானியம் வழங்கி பணி முடிந்துள்ளது.

**தனியார் பராமரிப்பு (Privatisation) :-**

வார்டு 6 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் தனியார் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் 86 நபர்கள் மூலம் வீடு வீடாக குப்பை சேகரித்தல், கால்வாய் தூர்வாருதல், தெரு கூட்டுதல் ஆகிய சுகாதார பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**சுடுகாடும் இடுகாடும் :–**

இரண்டு சுடுகாடுகளும் நகர்மன்றத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. வடகரை சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திலிருந்து தடையின்மை சான்று பெற்று செயல்பட்டு வருகிறது.

**குடிநீர் :–**

பெரியகுளம் நகராட்சிக்கு 1905–ம் ஆண்டிலிருந்து கொடைக்கானல் பேரிஜம் ஏரியிலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகரில் கிழ்கண்ட விபரப்படி குழாய் இணைக்கப்பட்டுள்ளது.

**பாதாள சாக்கடைத் திட்டம் :–**

தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந் நகராட்சியின் மொத்த பரப்பளவு 2.11 சதுர கி.மீ. சாலைகளின் மொத்த நீளம் 48.25 கி.மீ. இந்நகராட்சியின் மக்கள்தொகை 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 42976 ஆகும். இந்நகராட்சியிலுள்ள மொத்த வார்டுகள் 30 ஆகும்.

இந்நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண்.225/க.நி(ம) கு.வ.துறை/ நாள்.05.09.2012 மற்றும் அரசாணை எண் 23/கு.வ.துறை/ நாள்.27.01.2014 மூலம் ரூ.26.60 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தொழில் நுட்ப ஒப்புதல் ரூ.26.60 கோடி ரூபாய்க்கு, தலைமைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், மதுரை ந.க.எண்.116/ தகுவவாரியம்/2013–14/நாள்.19.02.2014 மூலம் வழங்கப்பட்டு திட்டப்பணிகளை துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்திட்டம் வீடுகளிலிருந்து பெறப்படும் கழிவுநீர் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் என்ற அளவில் கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் கழிவு நீர் சேகரித்து சுத்திகரிப்பு செய்வதற்கான திட்ட செயலாக்கம் மற்றும் பராமரிப்பு வடிவமைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான நிதி IUDM மேம்பாட்டு நிதி நிறுவனத்தின் நிதியிலிருந்து மானியமாகவும் மற்றும் நகராட்சியின் பங்களிப்பு நிதியும் பெறப்பட்டு பெற்று திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டது .

| மக்கள் தொகை விபரம் | மக்கள்தொகை | பெறப்படும் கழிவுநீரளவு |
|---|---|---|
| அடிப்படை ஆண்டு (2015) | 44950 | 5.17 எம்.எல்.டி. |
| இடைநிலை ஆண்டு (2030) | 46240 | 5.32 எம்.எல்.டி. |
| உச்சகட்ட ஆண்டு (2045) | 47550 | 5.47 எம்.எல்.டி. |

கழிவுநீர் சேகரித்தல் பணிக்காக 301 ஆள்நுழைவு தொட்டிகள் கட்டுதல் மற்றும் 280 புனர் அமைப்பு ஆள்நுழைவு தொட்டிகள் கட்டுதல், 8794 மீட்டர் நீளம் கழிவுநீர் குழாய்கள் பதித்தல் மற்றும் 6010 மீட்டர் நீளத்திற்கு புனர் அமைப்பு குழாய்கள் பதித்தல், 1500 கழிவுநீர் வீட்டிணைப்புகள், சாலை சீரமைத்தல் மற்றும் 3100 மீட்டர் நீளம் நீருந்து குழாய்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நகராட்சி பகுதிகள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பகுதி1 மற்றும் 2 லிருந்து பெறப்படும் கழிவு நீர் பிரதான நீருந்து நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து மின் மோட்டார் மூலம் 3.10 கி.மீ. தொலைவிலுள்ள எ,புதுப்பட்டி கிராமத்திற்கு அருகில் அமையும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீருந்து குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. அதற்கான களப்பணிகள் 27.04.2015 முதல் துவக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு நகராட்சி மூலம் வீட்டு கழிவுநீர் குழாய்கள் இணைப்பு வழங்க 25.10.2017 முதல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகராட்சி மூலம் அனைத்து பகுதிகளிலும் அதிகப்படியான வீட்டுக்கழிவுநீர் குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 5.47 எம்.எல்.டி. (உச்சகட்ட நிலை) கழிவுநீரை சுத்திகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் 27.4.2015 முதல் துவக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் கட்டுமானப்பணிகள் மற்றும் மின் இயந்திர சாதனங்கள் பொருத்தும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பின் 01.11.2017 முதல் 5 வருடங்களுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு 12.12.2022 அன்று முதல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு தற்சமயம் நாளொன்றுக்கு 4.00 மில்லியன் லிட்டர் கழிவுநீர் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு , நகராட்சிக்கு சொந்தமான 75 ஏக்கரில் புல்பண்ணை விவசாய பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது

**<u>மரம் நடுதல்</u> :–**

இந்நகராட்யில் நமக்கு நாமே திட்டம் 2022–2023ம் ஆண்டின் கீழ் 2300 மரக்கன்றுகள் , உரக்கிடங்கு மற்றும் நகர் பகுதியில் நடப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

**<u>பொதுக்குழாய்</u> :–**

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய் | – | 143 |
| வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | – | 7441 |

**<u>அளவுமானி முறை :–</u>**

வீட்டு உபயோகத்திற்கு 1000 லிட்டருக்கு ரூ.10/– வீதம் குறைந்த கட்டணமாக ரூ.100/– வீதம் மாதம் 1க்கு வீட்டு உபயோகம் தவிர மற்றவற்றிற்கு 1000 லிட்டருக்கு ரூ.9/– உள்ள கட்டணத்தை திருத்தி அமைத்து மாதம் ஒன்றுக்கு ரூ.100/– அளவு 1000 லிட்டருக்கு ரூ.10.00 வீதம் 1.4.2013 முதல் அமுலுக்கு கொண்டுவர மன்றம் தனது 26.10.12ம் தேதிய தீர்மானம் எண்.363ல் தீர்மானிக்கப்பட்டு 1.4.2013 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் குடியிருப்பு அல்லாத காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250/–என நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2013 முதல் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது.

குடிநீர் தரத்தை தெரிந்து உயர்த்திக்கொள்வதற்காக அவ்வப்போது குடிநீர் மாதிரிகள் அரசினரால் சோதனை சாலைக்கு அனுப்பட்டு வருகிறது. குடிநீர் பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | |
|---|---|
| பொருத்துனர் | 1 |
| குழாய் திருகி | 2 |
| குழாய் சுத்தம் செய்பவர் | 1 |
| தலைமைக் குடிநீர் நிலையம் சுத்தம் செய்பவர் | 1 |

## திட்டச் செயலாக்கம் 2023 – 2024

| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | KNMT கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023–2024 | பெரியகுளம் நகராட்சி பகுதிகளில் மண் சாலைகளை தார்சாலைகளாக அமைத்தல் பணி (27 No.) (2.043 கி.மீ) | 142.00 |
| 2. | நமக்கு நாமே திட்டம் – 2023–2024 | வார்டு எண்.14 தோட்டி காலனியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி<br>வார்டு எண்.7 அரண்மனை தெரு பகுதியில் உள்ள நகர்புற சுகாதார ஆரோக்கிய மைய கட்டிடத்திற்கு இரும்பு கதவு அமைத்தல் பணி | 14.75<br>2.00 |
| 3. | 15 CFC United Grant 2023- 2024 | 1. தண்டுபாளையம் பள்ளிவாசல் 1 st தெரு தோட்டி காலனி ரோடு தார்சாலை 0.250 கி.மீ அமைத்தல் பணி<br>2. மேம்படுத்தப்படும் தார்சாலை பணிகள் 6 எண்ணம் ரோடு 1.424 கி.மீ அமைத்தல் பணி | 9.00<br>64.00 |
| 4. | SFC Arrear Fund 2023-2024 | மேம்படுத்தப்படும் தார்சாலை 3 எண்ணம் 0.300 கி.மீ தார்சாலை அமைத்தல் பணி | 24.00 |
| 5. | SBM Urban 2.0 2023-2024 | கழிவுநீர் உறிஞ்சு ஊர்தி ( Cass Poll Tank) 60004 கொள்ளவு விநியோகம் செய்தல் பணி | 43.25 |
| 6. | MLA Fund 2023-2024 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | வார்டு எண்.13 அம்பேத்கர் நகர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்தல் பணி | 88.50 |
| 7. | பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2023–2024 | வார்டு எண்.22 12 மீட்டர் உயர்மின் கோபுர LED விளக்கு அமைத்தல் பணி | 6.50 |

**சாக்கடை வசதிகள் :–**

வராக நதியில் நகரில் பல பாகங்களிலிருந்து வந்து கலக்கும் சாக்கடை நீரை நிறுத்தவும், பொது சுகாதாரத்தினை பாதுகாக்கவும் முறையான சாக்கடை திட்டம் வெகு காலமாக நகர்மன்றத்தினரால் வலியுறுத்தப்பட்டது பலனாக அரசினர் தங்களது 14.7.1965–ம் தேதி 1627 (பொது சுகாதாரம்) எண் ஆணையில் 14.15 லட்சத்ததிற்கு பாதிக்கடன் பாதி மான்யம் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்படி திட்ட வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செய்யும்போது திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.23.00 லட்சத்திற்கு தயாரித்து அதனை 29.9.82–ம் தேதிய 1985–ம் எண் (பொதுப்பணித்துறை) அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது IUDM 2011–12 மற்றும் 2012–13ல் ரூ.122 லட்சத்தில் 10.378 கி.மீ. மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது.

புதைவடிகால் குழாய் நகரில் தென்கரை பகுதியில் 6 கி.மீ. நீளத்திலும் வடகரை பகுதியில் 5 கி.மீ. நீளத்திலும் பதிக்கப்பட்டுள்ளது. குழாய்கள் 6’ விட்டம் முதல் 12’ விட்டம் கொண்டதாகும். மேற்படி திட்டங்கள் அனைத்து வேலைகளையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முடித்து நகராட்சி பொறுப்பில் ஒப்படைத்தது. மேற்படி திட்டத்தை அவ்வமயம் உள்ளாட்சித்துறை இலாகா அமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர்.கா.காளிமுத்து, எம்.ஏ.,பி.எச்.டி., அவர்களால் 23.12.89ல் முறைப்படி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

புதைவடிகால் திட்டவிதிகளின் கீழ் ஒரு வீட்டிணைப்பிற்காக குறைந்தபட்ச கட்டணமாக ரூ.5000/– பொறுப்புத் தொகையும் மதிப்பீட்டு செலவில் 10% ஆய்வு கட்டணமாகவும் வசூல் செய்யப்படுகிறது. இதுவரை நகர்முழுவதும் 7032 இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நகரின் வடகரையில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. உந்துநிலையத்தில் ஸ்கிரீன் வெல் கிரிட் வெல் ஆகியவைகளில் சுத்தம் செய்யப்பட்டு கலெக்சன் வெல்லில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து 20 மற்றும் 50 மோட்டார் குதிரை திறனுடைய பம்புகள் மூலம் 2 கி.மீ. தொலைவிலுள்ள எண்டப்புளி புதுக்கோட்டை கிராமத்தருகே உள்ள பண்ணைக்கு உந்தப்படுகிறது. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.52.01 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 4.00 கி.மீ. நீளத்திற்கு புதைவடிகால் மெயின் நீடிக்கப்பட்டுள்ளது. தற்போது சிறு மற்றும் பெரு நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (UIDSSMT) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.2660.00 லட்சம் மதிப்பீட்டில் புதைவடிகால் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு அரசாணை எண்.23 நாள் 27.10.2014ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்பந்தப்புள்ளி கோரி 30.03.2015ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 14.80 கி.மீ. பகிர்மானக் குழாய், 580 எண்ணிக்கை மேன்ஹோல்கள்,1500 புதைவடிகால் இணைப்பு, 3.10 கி.மீ. பம்ப்பிங் மெயின்கள், ஒரு கழிவுநீரேற்று நிலையம் மற்றும் எண்டப்புளி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 5ஆண்டுகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் துறையினரால் பராமரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. நாளொன்றுக்கு 45.00 இலட்சம் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் புல்பண்ணைக்கு பயன்படுத்தப்படுகிறது.

**<u>தீ விபத்து :–</u>**

நகரில் திடீரென்று தீ விபத்துக்களை தடுக்க தீயணைப்பு படையினர் தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். மேற்படி நிலையத்தில் ஆம்புலன்ஸ் ஒன்றும், தீயணைப்பு வண்டிகள் இரண்டும் உள்ளன.

**<u>வருவாய் தரும் இனங்கள் :–</u>**

இந்நகர் சுற்று வட்டாரங்களில் பெரும் நகரங்களும் இரும்பு பாதை தொடர்பு இல்லாததாலும், கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதாலும், நகரினை சுற்றிலும் விளை நிலங்களும், மாந்தோப்புகளும் இருப்பதாலும் புதிதாக வருவாய் தரும் தொழில் ஏதும் ஆரம்பிக்க வழிவகையின்றி உள்ளன.

குறைந்த வருவாய் உடையவர்களுக்கென கட்டப்பட்டுள்ள 22 வீடுகளில் வாடகையாக அறிக்கையாண்டில் ரூ.178426/– பெறப்பட்டுள்ளது.

**குத்தகை:–**

நகர் மன்றத்தினரால் நிர்வகிக்கப்படும் குத்தகை இனத்தில் அறிக்கையாண்டில் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும் பின்வருமாறு:

**(3 ஆண்டு குத்தகை இனம்)**

| | | |
|---|---|---|
| 1. காய்கறி சந்தை | – | 924000 |
| 2. பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | – | 194117 |
| 3. சைக்கிள் ஸ்டான்ட் | – | 99540 |
| 4. திருமண மண்டபம் | – | 547072 |
| 5. புல்பண்ணை | – | 865500 |
| 6. கட்டண கழிப்பறை | – | 514504 |
| 7. ஆடு மாடு வதை கூடம் | – | 189263 |
| 8. பலன்தரும் மரங்கள் | – | 15225 |

**(9 ஆண்டு குத்தகை இனம்)**

| | | |
|---|---|---|
| 1. இடவாடகை (கடைகள்– 2 ) | – | 242388 |
| 2. ஐ.யு.டி.பி. (கடைகள் –26) | – | 1012124 |
| 3. ஐ.டி.எஸ்.எம்.டி.(கடைகள் –)100 | – | 1836970 |

**ஆடு, மாடு வதை செய்யும் இடம்:**

நகரில் தனியாக நடத்தும் ஆடு, மாடு வதை செய்யும் நவீன ஆடடி கூடம் இந்நகராட்சி எல்லைக்குள் இருக்கும் தொழில்களை துப்புரவு ஆய்வர்கள் அவ்வப்போது பார்வையிட்டு வருகின்றனர்.

**அலுவலகக் கட்டிடங்கள் :**

கீழ்க்கண்ட கட்டிடங்கள் அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

1. நகராட்சி அலுவலகம்
2. பேரூந்து நிலையம்
3. மூன்று நடுநிலைப் பள்ளிகள்
4. ஆடு வதை செய்யுமிடம்
5. தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்
6. கழிப்பறைகள்
7. தினசரி சந்தை
8. அலுவலர் குடியிருப்பு
9. தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி–2
10. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.பள்ளி கல்வி சத்துணவுமையங்கள்–3
11. மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள்–4
12. தலைமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்–1
13. காமராஜ் பஜாரிலுள்ள வணிக வளாகக் கட்டிடங்கள்
14. துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு
15. பேரூந்து நிலைய வணிகக்கடைகள்.
16. பேறுசார் மற்றும் குழந்தைகள் நலமையம்

**தங்கும் விடுதி :–**

இந்நகராட்சி சொந்தமான பயணியர் தங்கும் விடுதி கட்டிடம் பழுதடைந்த நிலையில் 2011–2012ம் ஆண்டு IHSDP திட்டத்தின் கீழ் பயணிகள் தங்கும் விடுதி இடிந்து சமுதாயக்கூடமாக கட்டி (தரைத்தளம், முதல்தளம் மற்றும் 2 கடைகள்) கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருந்ததால் மேற்படி சமுதாயக்கூட முதல்தளத்தின் கட்டிடத்தினை கூட்டுறவு தணிக்கைத் துறை அலுவலகத்திற்கு 01.10.2017 முதல் ஒப்படைக்கப்பட்டு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

**<u>பேருந்து நிலையம் :—</u>**

நகரில் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக தற்போது உள்ள நகரளவு எண்.1808 இடத்தில் உள்ள இடம் போதாது எனக் கருதி மேற்படி இடத்தை சுற்றி சாலைகள் உள்ளதை கருதியும் தற்போதுள்ள சூழ்நிலையில் நகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்.1118/2—ம் இடம் பொருத்தமானது எனக்கருதி இரண்டாம் வகுப்பு பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றம் தனது 18.11.87—ம் தேதிய தீர்மான எண்.706—ல் தீர்மானித்து மேற்படி இடத்தினை பூங்கா மற்றும் விளையாட்டு இடம் அறிவிப்பிலிருந்து நீக்கம் செய்து கருத்துரு உரிய முறையில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையம் அமைக்க ரு.40 இலட்சம் கடன் கோரியதில் மேற்படி பூங்கா மற்றும் விளையாட்டு திடல் ஏதும் அறிவிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பின்பே கடன் வழங்க இயலும் என நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் அறிவித்தார்கள். அரசு தனது 18.4.88ம் தேதிய அரசு ஆணை எண்.401 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையில் பூங்கா உள்ளது. புதிய பேருந்து நிலையம் ரூ.50 இலட்சம் உத்தேச செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கருத்துரு அரசுக்கு உரிய வழிமுறைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதற்கு, தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சி திட்டத்தின் மூலம் ரூ.25 இலட்சம் மட்டும் அனுமதியளிக்கப்பட்டு மேற்படி இடத்தில் முதல் கட்டப்பகுதி கட்டுமானப்பணியே முடிவெடுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி பேருந்து நிலையத்திற்கு சி கிளாஸ் அந்தஸ்து பெரியகுளம் மண்டல போக்குவரத்து அலுவலர் அவர்களால் 12.2.93—ம் தேதிய ஆர்.எஸ்.32892/93 எண்ணுள்ள கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் பேருந்து நிலையம் 23.8.93 முதல் இயங்கி வருகிறது. தற்போது புதிய பேருந்து நிலையம் VRB நாயுடு தெருவில் அமைக்க 127 மதிப்பீட்டில் புணரமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>காட்சிக்கடைகளும் திருவிழாக்களும் :—</u>**

பிரசுரம் செய்யப்பட்ட விழாக்கள் ஒன்றுமில்லை. நகரில் நடைபெற்ற முக்கிய விழாக்காலங்களில் பொது சுகாதாரம், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>திரைப்பட அரங்கு :—</u>**

இந்நகராட்சி எல்லைக்குள் இயங்கி வந்த தனியார் திரையரங்கு மூடப்பட்டுவிட்டது. நடப்பாண்டில் கேளிக்கை வரி ஏதும் நகராட்சிக்கு வரப்பெறவில்லை.

**<u>நில அபிவிருத்தியும், நகரமைப்பு திட்டங்களும் :—</u>**

அம்மையநாயக்கனூர் ரோடு — கம்பம் ரோடு பைபாஸ் நகரமைப்பு திட்டம். அரசு ஆணை எண்.1489, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.9.8.1967ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தென்கரை விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம். பகுதி I (மேற்கு) அரசு ஆணை எண்.1297, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.27.5.1971ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரு திட்டங்களுக்குமான நில ஆர்ஜிதம், செய்யத் தேவையான நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**<u>வரை கடப்புகள் :—</u>**

நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து வரைகடப்புகளும் அகற்றும்படி அரசு ஆணை.8 (பத்தாண்டு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.5.1.99—ல் அறிவுரைக்கப்பட்டதற்கிணங்கவும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு டபிள்யு.பி.எண்.689/05 மற்றும் டபிள்யு.எம்.பி.எண்.635/05, 636/05, 637/05 வழக்கின் 2.2.05ம் தேதிய உத்திரவின்படியும் வரைகடப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன.

**<u>நிதி நிலைமை :–</u>**

இந்நகராட்சியில் நிதி நிலைமை கடந்த பல ஆண்டுகளாக போதுமானதாக இல்லை. நடப்பாண்டில் வரவு செலவு திட்டம் ரூ.7135279/– உபரியில் உள்ளது.

**<u>நகரமைப்பு :–</u>**

நகரமைப்பு பிரிவில் உள்ள பணியாளர்கள் விவரம்

1. நகரமைப்பு ஆய்வாளர் – 1

**<u>கட்டிட மனுக்கள் :–</u>**

2022–2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை –107

2022–2023 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை – 78

2022–2023 ஆம் ஆண்டில் அனுமதி மறுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை – 27

**<u>பூங்கா மற்றும் விளையாட்டு திடல் :–</u>**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.12129/2017/டிபி3 நாள் 08.06.2017 ஆம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பூங்கா, விளையாட்டு திடம் மற்றும் திறந்த வெளியிடங்கள் பட்டியலை அரசு மூலம் அறிவிக்கை செய்வதற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் கீழ்காணும் விவரப்படி பூங்கா மற்றும் விளையாட்டு திடல்கள் உள்ளன.

**பூங்கா :–**

| | | | |
|---|---|---|---|
| 1 | காயிதே மில்லத் பூங்கா,<br>கொய்யா தோப்பு பூங்கா | 1481 ச.மீ | நகரளவு எண்.1959/6A |
| 2 | அம்பேத்கர் நகர் பூங்கா | 22603 ச.மீ, | நகரளவு எண்.2032/2 |
| 3 | வடக்கு பாரஸ்ட் பூ ங்கா | 110.59 ச.மீ | நகரளவு எண்.1036/1B |

**<u>விளையாட்டு திடல்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி | 6496. ச.மீ | நகரளவு எண்.46,<br>46/2, 46/4 |
| 2 | யூனியன் கிளப் விளையாட்டு மைதானம் | 679.37 ச.மீ,<br>321.24 ச.மீ<br>266.71 ச.மீ | நகரளவு எண்.4634<br>நகரளவு எண்.4488/1<br>நகரளவு எண்.4488/2 |

**<u>முதலீடுகள் :–</u>**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் ஆரம்ப இருப்பு | 43885647.02 |
| முதலீடு செய்யப்பட்ட தொகை | 6288454.00 |
| மொத்தம் | 50174101.02 |
| முதலீட்டில் திரும்பப்பெற்றது | 12644859.1 |
| முடிவு இருப்பு | 37529241.92 |

2023–2024ஆம் ஆண்டில் வரி மற்றும் வரியற்ற இனங்களில் கேட்பு, வசூல், நிலுவை மற்றும் சதவீத விபரம் _ கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி வசூல் :–**

| | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலுவை | 1639090 | 778303 | 860787 | 47.48 % |
| நடப்பு | 24590413 | 23104096 | 1486317 | 93.96 % |

**காலியிட வரி :–**

| | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலுவை | 225979 | 225979 | 0 | 100% |
| நடப்பு | 2112771 | 211271 | 0 | 100% |

**தொழில் வரி :–**

நடப்பாண்டில் தொழில்வரி வசூல் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| நிலுவை | 30857 | 30857 | 0 | 100 % |
| நடப்பு | 2860602 | 2860602 | 0 | 100 % |

தொழில் நிறுவனங்கள் 790

அரசு அலுவலர்கள் 76

**குடிநீர் கட்டணம் :–**

| | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலுவை | 3309813 | 1318565 | 1991248 | 39.84 % |
| நடப்பு | 9039166 | 7065884 | 1973282 | 78.17% |
| **குத்தகை இனம்** | | | | |
| நிலுவை | 2499600 | 95052 | 2404638 | 3.80 % |
| நடப்பு | 6293474 | 6236399 | 57075 | 99.09% |
| **குப்பை வரி** | | | | |
| நிலுவை | 220971 | 102661 | 118310 | 46.46 % |
| நடப்பு | 2354160 | 2107307 | 246853 | 89.51% |

**புதை வடிகால் கட்டணம் :—**

| | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| நிலுவை | 2603760 | 842557 | 1761203 | 32.36 % |
| நடப்பு | 6324350 | 4964950 | 1359400 | 78.51% |

**அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் (D&O)**

அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான

உரிமம் பெற்ற கடைகள் – 356

அபாயகரமானதும் அருவருக்கத்தக்க இனங்களுக்கான உரிமம் (D&O) – 356

| | **கேட்பு** | **வசூல்** | **நிலுவை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| டி.&ஓ | 216734 | 216734 | – | 100 % |
| பி.எப்.ஏ | இல்லை | இல்லை | இல்லை | % |

**பொது நூலகங்கள் :—**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியால் நூலகங்கள் எதுவும் பராமராக்கப்படவில்லை. மாவட்ட நூலக குழுவினரால் 2 நூலகங்கள் பராமரிக்கப்படுகிறது. நூலகத்திற்கு நூலவரியாக ரூ.14,91,894/— அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**பொது வருவாய் :—**

ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் கட்டிடங்களுக்கு அரையாண்டு விதிக்கப்படும் வரிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| பொதுக் காரியங்களுக்கான வரி | 6.80% |
| தண்ணீர் வரி | 2.00% |
| சாக்கடை வரி | 2.00% |
| விளக்கு வரி | 2.00% |
| துப்புரவு வரி | 3.50% |
| கல்வி வரி | 2.50% |
| நூலுகவரி(கல்வி வரி நீங்கலாக இதர இனங்களுக்கு) | 0.10% |

**தொழில் வரி :—**

நகராட்சி நிர்வகாம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசாணை எண்.249. நாள் 28.12.1990ன்படியும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம்) 1998—ன்படியும் 01.10.1998 முதல் தொழில்வரி தொழில் புரிவோர் மற்றும் பல்வேறு தொழில்களுக்கும் நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி தொகைக்கான படிவங்களை சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. 2023—24 ஆம் ஆண்டிற்கு கேட்பு ரூ.2860602/— நிர்ணயிக்கப்பட்டு ரூ.2860602/— வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>விவசாய நிலங்களுக்கான வரி</u> :–**

தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.134 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை 19.03.81ன்படி 1981–82–ஆம் ஆண்டு முதல் விவசாய நிலங்களுக்கான வரி ரத்து செய்யப்பட்டது.

**<u>சொத்துவரி பொது சீராய்வு 2022</u> :–**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2023–2024 முதலாம் அரையாண்டு (01.04.2023) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி கீழே கண்டவாறு சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>சொத்துவரி</u> :–**

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building)

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**<u>காலிமனை வரி சீராய்வு :–</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும்போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கெனவே உள்ள சொத்து வரி/ காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில்(GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்து வரி/ காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மண்டலங்கள் வாரியாக சொத்துவரி சீராய்வு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு சமாப்பிக்கப்படுகிறது.

| குடியிருப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின் சதுர.அடி | | | |
| | | <=600 | 601-1200 | 1201-1800 | >=1801 |
| | | 1.25 | 1.50 | 1.75 | 2.00 |
| A | 1.00 | 1.25 | 1.50 | 1.75 | 2.00 |
| B | 0.80 | 1.00 | 1.20 | 1.40 | 1.60 |
| C | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 |

| வணிகம் | | |
|---|---|---|
| **மண்டலம்** | **பழைய மண்டல மதிப்பு** | **வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு(*2)** |
| A | 3.00 | **6.00** |
| B | 2.40 | **4.80** |
| C | 1.80 | **3.60** |

| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | | |
|---|---|---|
| **மண்டலம்** | **பழைய மண்டல மதிப்பு** | **வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு** |

| | | (*1.75) |
|---|---|---|
| A | 1.50 | 2.625 |
| B | 1.20 | 2.10 |
| C | 0.90 | 1.575 |

| தொழிற்சாலை | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 2.00 | 3.50 |
| B | 1.60 | 2.80 |
| C | 1.20 | 2.10 |

| காலிமனை வரி | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A-குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் பகுதி | 0.15 | 0.30 |
| B-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.20 | 0.40 |
| C- முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.25 | 0.50 |

இந்த சொத்து வரி சீராய்வின் 30.06.2022—க்குள் முடிக்கப்பட அறிவுறுத்தியதின் படி தற்போது இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 30.06.2022 அன்று புதிய கேட்பு எழுப்பப்படவுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை :—**

இந்நகராட்சியில் 9துப்புரவு பணியாளர்களும் 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் ஒரு துப்புரவு ஆய்வாளர் இருவரும் மற்றும் 2 ஓட்டுனர்கள் பணிபுரிகின்றார். 9 LCV இரு டிப்பர் லாரி, 15 BOV, 12 Puscard மூலம் குப்பை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது. நகராட்சிக்கு சொந்தமான 7.98 ஏக்கர் பரப்பில் கலவை உரத்திடல் உள்ளது. 4MT கொள்ளவில் 1 MCC யும் 3MT கொள்ளவில் 1MCC யும் செயல்பாட்டில் உள்ளது. அறிக்கையாண்டில் மண்புழு உரம் பாத்தி அமைத்தல் முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தினசரி சுமார் 13.M.T குப்பைகள் நகரில் அகற்றப்பட்டு கலவை உரத்திடலில் 2 HCV கொட்டப்பட்டு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கலவை உரத்திடலை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வழக்குகள் :—**

| | | |
|---|---|---|
| சென்ற ஆண்டு நிலுவையிலுள்ள வழக்குகள் | — | 12 |
| நடப்பாண்டு வழக்குகள் | — | 2 |
| மொத்தம் | — | 14 |
| அறிக்கையாண்டில் முடிவுபெற்ற வழக்குகள் | — | 13 |
| நிலுவையிலுள்ள வழக்குகள் | — | 1 |

**அரசு கடன்களை திருப்பி செலுத்திய விபரம் :–**

இந்நகராட்சி பல ஆண்டுகளாகவே நிதி பற்றாக்குறையாக உள்ள நகராட்சி ஆகும். ஆண்டிற்காண்டு அரசிடமிருந்து வழிவகை முன்பணம் பெற்றுத்தான் செயல்பட்டு வந்தது. கூடுதலாக உள்ள பணியாளர்களில் 25 நபர்களை ஒருவழி மாறுதல் செய்து மேற்படி பணியிடங்கள் குறைக்கப்பட்டு உள்ளது. மேலும், கூடுதலாக உள்ள 43 துப்புரவு பணியாளர்களை பழனி நகராட்சிக்கு ஒருவழி மாறுதல் செய்யப்பட்டு மேற்படி பணியிடங்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 01.04.2022 முதல் சொத்துவரி திருத்தம் செய்யப்பட உள்ளது. எனவே இனி வருங்காலங்களில் நிதி நிலைமை சீரடைய வாய்ப்பு உள்ளது. விரைவில் கடன்களை திருப்பி செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் | 43229814 |
| அசலாக திருப்பி செலுத்திய கடன் தொகை | (–) 4995420 |
| ஆண்டிறுதியில் கடன் தொகை | 38234394 |

**கணிப்பொறி பிரிவு :–**

இந்நகராட்சியில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.06.1999–ம் நாளிட்ட ந.க.எண். 19543/98/டீரு–1 செயல்முறை உத்திரவின்படி கணினி உதவி திட்ட அமைப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இந்நகராட்சியில் தற்போது 14 கணினிகள், 4 டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள், 8 லேசர் பிரிண்டர்கள் மற்றும் 3 UPS சாதனங்களும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.
இந்நகராட்சியின் பணிகளான பிறப்பு, இறப்பு சான்றிதழ், வழங்குதல், வருவாய் இனங்களான சொத்துவரி, தொழில்வரி, குத்தகை, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடைகட்டணம் ஆகியவற்றின் வசூல் பணி, இதர கட்டண வசூல் (சிட்டா வசூல்), அசையும் சொத்துகள், அசையா சொத்துகள், கட்டிட அனுமதி வழங்குதல், நகராட்சியின் வரவு–செலவு கணக்குகள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் தொடர்பான பணி தகவல்கள் மற்றும் மின் ஒப்பந்தப்புள்ளி முறை போன்றவை கணினியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் கணினிகளில் இணைய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை, மாவட்ட ஆட்சியர் மற்றும் அனைத்து நகராட்சி அலுவலகங்களுக்கும் கடிதப் போக்குவரத்தில் மின்னஞ்சல் வசதி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியின் மின்னஞ்சல் முகவரி : commr.periyakulam@tn.gov.in

இந்நகராட்சியைப் பற்றிய தகவல்களையும், செய்திகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வசதியாக இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணையதள முகவரி http://municipality.tn.gov.in/periyakulam

**பொது :–**

அறிக்கையாண்டில் யாதொரு தொற்றுநோயும் பரவவில்லை. இந்நகர்மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. சாக்கடை வசதி மற்றும் விளக்கு வசதிகள் நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டது.

**ஆணையாளர்**
**பெரியகுளம் நகராட்சி**